**D.V.C. 16 of 2019 Previous Date : 08.04.2022**

**RW2**

**ஆறுமுகம் த/பெ.சீவலராமன்**

**12.03.2026.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 12.03.2026.**

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

**1. நான் தாக்கல் செய்த பிரமாண வாக்குமூலத்தை எனது வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றாலும் என் மகன் சொல்லி தான் தெரியும் என்றாலும் சரியல்ல. மனுதாரரும், எதிர்மனுதாரரும் காதலித்து திருமணம் செய்த விபரம் எனக்கு தெரியுமா என்றால் திருமணம் செய்த விபரம் எனக்கு தெரியாது. மனுதாரரும், எதிர்மனுதாரரும் எனது வீட்டில் வந்து வாழ்ந்து இருக்கவில்லை என்றால் சரிதான், அவர்கள் தனியாக தான் இருந்தார்கள். மனுதாரர் திருமணத்தின்போது 30 பவுன் நகை மற்றும் பண்ட பாத்திரங்கள் கொண்டு வந்தார் என்றால் இல்லை. அந்த நகைகளை விற்று தான் என் மகன் பஸ் வாங்கி மற்றும் சேம்பர் பங்குதாரராக மாறினார் என்றால் நான் பஸ் வாங்கினேன், எனது மகன் டிரைவர், சேம்பரில் 10 சதவீதம் எனது மகன் பெயரில் உள்ளது, அந்த சேம்பர் இயங்கவில்லை. எனது மகன் தாராபுரத்திலும், பழனியிலும் இரண்டு புகார்கள் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எங்கள் வற்புறுத்ததால் தான் மனுதாரரை எதிர்மனுதாரர் கொடுமை செய்தார் என்றால் சரியல்ல. மனுதாரரை வேறு நபருடன் தொடர்பில் இருப்பதாக சொல்லியுள்ளதில் அது யார் என்று தெரியுமா என்றால் தெரியும். மனுதாரரை பற்றி நான் பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் இல்லை. குழந்தையை மனுதாரர் தூக்கி சென்றதாக காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் அந்த குழந்தை தற்போது உயிருடன் இருக்கிறதா, இல்லையா என்று தெரியவில்லை.**

| | |
|---|---|
| **நீதிமன்ற கேள்வி** | **எனது மகனுக்கு அந்த குழந்தை உயிருடன் இருக்கிறதா, இல்லையா என்று தெரியுமா என்றால்** |
| **பதில்** | **அது எனக்கு தெரியாது.** |
| **நீதிமன்ற கேள்வி** | **நான் என் மகனிடம் அவன் மகன் உயிருடன் இருக்கிறானா** |

| | |
|---|---|
| | என்று கேட்டேனா என்றால் |
| பதில் | பலமுறை கேட்டேன் எனது மகன் அது பற்றி தெரியாது என்று சொன்னார். |
| நீதிமன்ற கேள்வி | உங்கள் மகன் தனது குழந்தை பற்றி தெரியாது என்று சொல்லியுள்ள நிலையில் எதன் அடிப்படையில் அந்த குழந்தை உயிருடன் இருக்கிறாரா, இல்லையா என்று சொல்கிறேன் என்றால் |
| பதில் | நான் பார்த்ததில்லை |
| நீதிமன்ற கேள்வி | அந்த குழந்தையை பார்ப்பதற்கு நான் என்ன முயற்சி செய்தேன் என்றால் |
| பதில் | நான் பல நபர்களிடம் பக்கத்து வீட்டுக்காரர் மூலமாக கேட்டேன். |
| நீதிமன்ற கேள்வி | பக்கத்து வீட்டுக்காரர் பெயர் என்ன என்றால் |
| பதில் | பக்கத்து வீட்டுக்காரர் பெயர் தெரியவில்லை, பல முறை பார்க்க முயற்சித்து சந்தேகத்தின் அடிப்படையில் சொல்கிறேன் |
| நீதிமன்ற கேள்வி | நான் என் மகனிடம் அந்த குழந்தை உயிருடன் இருக்கிறதா, இல்லையா என்ற சந்தேகத்தை சொல்லி கேட்டேனா என்றால் |
| பதில் | எனது மகன் அவருக்கு தெரியாது என்று சொன்னார் |
| நீதிமன்ற கேள்வி | நான் அந்த சந்தேகத்திற்காக காவல் நிலையத்தில் புகார் கொடுக்க அனுகினேனா என்றால் |
| பதில் | இல்லை |
| நீதிமன்ற கேள்வி | உங்களுடைய பேரன் உயிருடன் இருக்கிறாரா, இல்லையா என்று தெரியவில்லை என்று சந்தேகம் வந்த பிறகு ஏன் காவல் நிலையம் செல்லவில்லை என்றால் |
| பதில் | இந்த வழக்கு நடந்து கொண்டிருப்பதால் செல்லவில்லை |

2. குழந்தையை எனது மகன் அவருடைய பராமரிப்பில் வைத்து

கொள்வார் என்று நான் நிரூபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் என்றால் நான் அப்படி சொல்லவில்லை. நான் என் மகனுக்கு நிரந்தர வருமானம் இல்லை என்று சொல்வது பொய் என்றால் என் மகனுக்கு எவ்வளவு வருமானம் இருக்கும் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கு தாக்கல் செய்த பின்பு எனது மகன் பஸ் மற்றும் சேம்பரை விற்றது போல் ஆவணம் தயார் செய்து கொண்டார் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ள சங்கதிகள் உண்மையல்ல என்றாலும் என் மகனுக்காக பொய் சாட்சி சொல்கிறேன் என்றாலும் சரியல்ல.

M PONPANDI

Digitally signed by M PONPANDI
Date: 2026.03.12 18:23:37 +0530

நீதித்துறை நடுவர்,
பழனி.

**D.V.C. 16 of 2019** **Previous Date : 08.04.2022**

**RW3**

**பாஸ்கரன் த/பெ.ராஜேந்திரன்**

**12.03.2026.**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of the Day of 12.03.2026.**

**<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1. நான் ஆயக்குடி TKN புதூரில் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். ஆறுமுகம் மற்றும் அவரது மகனை தெரியுமா என்றால் தெரியும். ஆறுமுகம் மகனின் பெயர் என்ன என்றால் சேந்தன் பிரபு. நான் என்ன தொழில் செய்கிறேன் என்றால் கூப்பிடும் வேலைக்கு செல்வேன். நான் ஓட்டுநராக இருக்கிறேனா என்றால் இல்லை. நிரூபண வாக்குமூலத்தில் எழுதியுள்ள விபரங்கள் எனக்கு தெரியாமல் கையொப்பம் செய்தேன் என்றால் சரியல்ல, காவல் நிலையத்தில் நடந்த விபரங்கள் தெரியும், நான் அந்த நேரத்தில் சேந்தன்பிரபுக்காக சாட்சியாக நின்றிருந்தேன். சேந்தன்பிரபுக்கு எந்த ஊர் என்றால் தாராபுரம். எனக்கும், சேந்தன்பிரபுக்கும் எப்படி அறிமுகம் என்றால் நான் போகும் பஸ்ஸில் சேந்தன்பிரபு Owner என்பதால் எனக்கு அறிமுகமாகி பழக்கமானது. குடும்ப விவகாரங்கள் எனக்கு தெரியாது என்றால் ஓரளவுக்கு தெரியும். குடும்ப விபரங்கள் சேந்தன்பிரபுவும், அவரது அப்பா ஆறுமுகமும் சொல்லி தான் தெரியும் என்றால் சரிதான். நான் பழகியுள்ள சேந்தன்பிரபுவுக்கு பஸ் மற்றும் சேம்பர் உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் அவருக்கு இருக்கலாம் எனக்கு தெரியாது. எந்த காவல் நிலையத்தில் அவ்வாறு விசாரணை சாட்சியாக இருக்கும்போது தெரியும் என்றால் பழனி நகர் காவல் நிலையத்தில் இருக்கும் போது தெரியும். வேறு காவல் நிலைய விசாரணை பற்றி எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. குழந்தை மனுதாரரிடம் உள்ள விபரம் மற்றும் எதிர்மனுதாரருக்கு தொழில் நஷ்டமாகியுள்ளதாக சொல்லியுள்ள விபரம் சேந்தன்பிரபு சொல்லி தான் தெரியும் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. குழந்தை மனுதாரருடன் உள்ளது என்றும், எதிர்மனுதாரருக்கு தொழில் நஷ்டமாகிவிட்டது என்றும், வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். எதிர்மனுதாரருக்கு நான் நண்பர் என்பதால் அவர் சொல்லி கொடுத்து வழக்கிற்காக பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

M PONPANDI Digitally signed by M PONPANDI Date: 2026.03.12 18:23:44 +0530

நீதித்துறை நடுவர்,

பழனி.